2013 ஏப்ரல் 1]

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் சட்டப் பேரவை தொகுதிக்குட்பட்ட கும்பகோணம் ஒன்றியத்தில் உள்ளடங்கிய அனக்குடி, மானம்பாடி, புத்தூர், மகாராஜபுரம், சேங்கனூர் ஆகிய ஊராட்சிகளில் 60–க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களும் இருக்கின்றன. திருப்பனந்தாள், கும்பகோணம் ஆகிய பகுதிகளிலிருந்துதான் மின்சாரம் வழங்கப்பட்டு மின் விநியோகம் நடைபெறுகிறது. எனவே, பல்லாயிரக்கணக்கான விவசாயிகளைப் பாதுகாக்க புத்தூரில் துணை மின் நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் பளுவை ஆய்வு செய்து, அத்தனை பகுதிகளுக்கும் புதிய துணை மின் நிலையங்களைத் தேவைக்கேற்ப அமைக்கவேண்டுமென்று ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள் குறிப்பிட்ட பகுதிகளிலும் உடனடியாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தேவை ஏற்படின் நிச்சயமாக அந்தப் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

107—

மாம்பழக் கூழ் தொழிற்சாலை

***7099—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 ஏப்ரல் 1

(அ) ஆத்தூர் தொகுதி, பெரிய கல்வராயன் மலைப் பகுதியில மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, பெரிய கல்வராயன் மலைப் பகுதியில் மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழில் நிறுவனம் தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தாலும்கூட, ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் ஆத்தூர் தொகுதியில் மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழில் நிறுவனம் தொடங்க முன்வந்தால், அவர்களுக்கு முதலீட்டு மானியம், வேலைவாய்ப்பு பெருக்க மானியம், கூடுதல் முதலீட்டு மானியம், குறைந்த அழுத்த மின் மானியம், மின்னாக்கி மானியம் போன்ற மானியங்கள் பெற்றுத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேவை மனமும், செயல்திறனும் தனது இரு விழிகளினுடைய வெளிச்சமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாட்சிமை பொருந்திய புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட பெரியகல்வராயன் மலை மற்றும் சின்னகல்வராயன் மலையில் சுமார் 2,500 ஹெக்டேர் நிலப்பரப்பில் முழுக்க, முழுக்க பழங்குடியின மக்கள் மா விளைச்சல் செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கு ஆண்டொன்றுக்கு 20,000–லிருந்து 25,000 மெட்ரிக் டன் மாம்பழம் உற்பத்தி செய்யப்படுகிறது. அப்படி உற்பத்தி செய்யப்படும்பொழுது, உரிய காலத்தில் மாம்பழங்களை எடுக்க முடியாத காரணத்தினால், 25 முதல் 30 சதவீத பழங்கள் வீணாகின்றன. ஆகவே, இதைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு முன்னுரிமை வழங்கி, மாம்பழக் கூழ் தொழிற்சாலையை அந்தப் பகுதியில் அமைக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

2013 ஏப்ரல் 1]

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் தொகுதியில் மொத்தம் 1,700 ஹெக்டேர் பரப்பளவில் 8,500 மெட்ரிக் டன் மாம்பழம் விளைவிக்கப்படுகிறது. இவ்வாறு விளைவிக்கப்படும் மாம்பழம் வீட்டு உபயோகத்திற்கும், பிற மாவட்டங்களுக்கும் மற்றும் பிற மாநிலங்களுக்கும் விற்பனை செய்வதற்குப் போதுமானதாக உள்ளது என்பதையும், அதே நேரத்தில் எந்த ஒரு சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனத்தையும் அரசே தொடங்காது என்பதால், தொழில் முனைவோர் எவரேனும் அங்கு மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழில் நிறுவனத்தைத் துவங்க முன்வருவார்களேயானால், சேலம் மாவட்டத்தினுடைய தொழில் மையத்தின் மூலமாக அதற்கான மானியங்கள் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய கல்வராயன் மலை மற்றும் சின்னகல்வராயன் மலைப் பகுதிகளில் முழுக்க முழுக்க அரசினுடைய பெரும் பழத் தோட்டங்கள் மூன்று உள்ளன. ஆகவே, தனியார் துறை வருகிறதோ இல்லையோ, அரசு இதைக் கருத்தில் கொண்டு, அந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பரிந்துரை செய்து, வரும் காலத்திலே அமைத்துக் கொடுக்குமாறு தங்கள் வாயிலாகக் கேட்டு, நன்றி கூறி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெரியகுளம் தொகுதியிலும், அத்தொகுதி அமைந்துள்ள தேனி மாவட்டத்திலும் சுமார் 14,000 ஹெக்டேர் பகுதியில் மாம்பழம் விளைந்து கொண்டிருக்கிறது. ஓராண்டுக்கு 1,75,000 டன் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. என்னுடைய*

தொகுதியில் மட்டும் 9,000 ஹெக்டேர் பகுதியிலேயும் ஏறத்தாழ 1,19,000 டன் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. இந்தப் பகுதியில் ஒரு மாம்பழக் கூழ் தொழிற்சாலை வேண்டுமென்கிற கோரிக்கை நீண்ட நாட்களாக விவசாயிகளிடமிருந்து வருகிறது. பெரும்பாலான பழங்கள் ஏற்றுமதியாகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, உள்ளூர் தேவை மட்டும் அங்கு இல்லை. 75 சதவிகிதம் ஏற்றுமதியாகிக் கொண்டிருக்கிறது. விவசாயிகளுக்கு விலை கிடைக்கவில்லை. கடந்த 2011–2012 ஆம் ஆண்டின்போதும் இந்த விஷயத்தை நான் குறிப்பிட்டிருக்கிறேன். 30 கோடி ரூபாய், 40 கோடி ரூபாயில் தனியார்கள் அங்கே தொழிற்சாலையைத் துவக்குவது என்பது சாத்தியமல்ல. மிகப் பெரிய அளவுக்கு ஒரு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருகிற, விவசாயத்தைச் சார்ந்திருக்கக்கூடிய பெரியகுளம் பகுதிக்கு இந்த ஆலை அமைவதன்மூலம் வேலைவாய்ப்பும், விவசாயிகளுக்கு நல்ல விலையும் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் பரிந்துரை செய்ய பணிவோடு மீண்டும் கேட்டு அதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் தொகுதியில் மாம்பழம் தேவைக்கேற்ப இருக்கிறதென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். என்றாலுங்கூட, இங்கே தொழில் முனைவோர் எவரேனும் வருவார்களேயானால், நம்முடைய அரசுமூலம் அதற்குண்டான மானியங்கள் எல்லாம் தரப்படும். அதிகபட்சமாக 15 விழுக்காடும், அதிகபட்சமாக ரூ.3 இலட்சம் முதல் ரூ.30 இலட்சம் வரை முதலீடு மானியமும் வழங்கப்படும். மேலும், ரூ.5 இலட்சம் வரை வேலைவாய்ப்பு பெருக்க மானியமும், இன்னும் சொல்லப்போனால், பல்வேறு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுவதற்காக அடமானம் வைக்கப்பட்ட அல்லது பிணையம் வைக்கப்பட்ட ஆவணங்களைப் பதிவு செய்வதற்கான முத்திரைக் கட்டணம் ஆகியவற்றுக்கு விலக்கும் அளிக்கப்படுகிறது. அதேபோன்று, 320 கே.வி.ஏ. வரை திறனுள்ள மின்னாக்கிகளின் விலையில் 25 விழுக்காடு அரசு

2013 ஏப்ரல் 1]

மானியமாகத் தருகிறது. எந்தவிதமான நிறுவனத்தையும் அரசே நடத்த இயலாத நிலையில் இருக்கிறது. எனவே, தனியார்கள் முன்வருவார்களேயானால், அவர்களுக்கு இந்த மானியங்கள் எல்லாம் தரப்பட்டு அவர்கள் ஊக்குவிக்கப்படுவர். என்றாலுங்கூட, பெரியகுளம் தொகுதி உறுப்பினருடைய வேண்டுகோளை மனதிலே ஏற்று, அவருடைய கருத்து சிந்திக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில் வளர்ச்சியில் தமிழக அரசு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையும், கவனத்தையும் செலுத்தி வருகிறது என்பது பாராட்டுக்குரிய ஒரு விஷயம். கிராமப்புற விளைபொருட்களைக் கொண்டு ஊரகத் தொழிற்சாலைகள் அமைப்பதில் தனியார்கள் முன்வந்தால் ஊக்கப்படுத்துவோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாம்பழச் சாறை வெளிநாட்டுக் கம்பெனிகள் இங்கே கொண்டு வருகிறார்கள். ஆகவே, தமிழகத்திலேயே* fast food*–க்குத் தேவையான மக்காச் சோளம் உட்பட, எல்லாப் பொருட்களையும் தயாரிக்க முடியும். ஆகவே, தொழில் துறைமூலம் மூலதனமிட்டு, ஏதாவதொரு மாவட்டத்தில் அதைத் துவக்கி, நல்ல இலாபம் கிடைக்கிறதா என்று பரீட்சார்த்தமாகப் பார்ப்பதற்கு அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–15

அரசு ஏற்று நடத்துகிற டாஸ்மாக் கடைகள்மூலம் பல கோடி ரூபாய் இலாபம் கிடைக்கிறபோது, உடல் நலத்திற்கு ஊக்கம் தரக்கூடிய மாம்பழச் சாறு உள்ளிட்ட நம்முடைய விவசாய விளைபொருட்களைப் பயன்படுத்தி, அரசே தொழிற்சாலைகளை உருவாக்கி, ஏற்று நடத்துவதற்கு முன்வந்தால் நல்ல இலாபம் கிடைக்கும். ஆகவே, இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்தாய்வு செய்து அரசு ஒரு புதிய திட்டத்தை அறிவிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2013 ஏப்ரல் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீண்டதொரு கேள்வியை இங்கே எழுப்பினார்கள். இதில் தனியார், அரசு என்கிற பாகுபாடுகளையெல்லாம் அரசு பார்ப்பது கிடையாது. வெளிநாட்டிலேயிருந்து பெரிய தொழில் பொருட்களெல்லாம் இங்கே வருகின்றன என்று குறிப்பிட்டார்கள். அதில் எதையெதை எதிர்க்க வேண்டுமோ அதையெல்லாம் அம்மா அவர்களுடைய அரசு தக்க நேரத்திலே எதிர்த்து, எதிர்ப்புக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். என்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு யோசனையைத் தெரிவித்திருக்கிறார்கள். மக்காச் சோளம், கிராமப் பகுதியிலே மிக அதிகமாக இருக்கிறது. அதனை எப்படி பயன்படுத்திக் கொள்ளலாம் என்கிற திட்டத்தை, துறை அலுவலர்களோடு கலந்து பேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று இந்தத் திட்டம் குறித்து சிந்திக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

108—

சொந்தக் கட்டடம்

***8828—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, தேவகோட்டை நகரிலுள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?